விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 327 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 25 சனிக்கிழமை (11.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## உங்கள் வலம்புரியின் புதிய அலுவலகம்




*அன்பு வாசகர்களே!*

உங்கள் வலம்புரிப் பத்திரிகையின் புதிய அலுவலகம் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சந்திக்கும் யாழ். 11

## இது மொட்டுக் கட்சி ஆட்சி எவருக்கும் அநீதி இடம்பெறாது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

"இது மொட்டுக் கட்சியின் ஆட்சி, இந்த ஆட்சியில் எவருக்கும் அநீதி இடம்பெற இடமளிக்கமாட்டோம்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான 11

# இலங்கை கிரிக்கெட்டுக்கு சர்வதேசத் தடை

### சர்வதேச கிரிக்கெட் பேரவை அதிரடி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணிக்கு சர்வதேச தடை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை தடை செய்ய சர்வதேச கிரிக்கெட் பேரவை தீர்மானித்துள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (11ஆம் பக்கம் பார்க்க)

International Cricket Council

அனைத்து துறையினருக்கும்

## ரூ.20 ஆயிரத்தால் சம்பளத்தை உயர்த்துக

### தேசிய தொழிலாளர் சபை

(கொழும்பு)

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் அரை அரசு ஊழியர்களுக்கு மாதாந்தம் 11

150 மில்லியன் டொலர்

## இலங்கைக்கு வழங்க உலக வங்கி அனுமதி

(கொழும்பு)

இலங்கையின் நிதித்துறையின் பாதுகாப்பை பலப்படுத்த உலக வங்கி 150 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. 11

இரு வாரங்களில்

## க.பொ.த சா/த பெறுபேறுகள்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் இரண்டு வாரங்களில் வெளியிட முடியும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம் 11

16 வருடங்களின் பின்

## 3 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

16 வருடங்களின் பின்னர் 3 தமிழ் அரசியல் கைதிகள் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2006ஆம் ஆண்டு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பய 11

தீபாவளியை முன்னிட்டு

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு திங்கட்கிழமை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை (நவம்பர் 13) விசேட விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை (நவ.12) தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த முடிவு எடுக்கப் 11

NLB
NATIONAL LOTTERIES
அறுபதுக்கு அறுபது பரிசுகளை வெல்லுங்கள்


ஆண்டு லொத்தர்
மில்லியன் பரிசுகள்
ஐந்து லட்சம் பரிசுகள்
தங்கக் காசுகள்
60 வீதம்
ரூபா 5,000 பரிசுகள் 10,000
சீட்டிழுக்கப்படும் திகதி டிசம்பர் 28
(C-2163)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Romania வேலைவாய்ப்பு விசா

Romania நாட்டில் Electrician மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) (17833)

**021 222 1265, 076 250 0098**


# கசிப்பு நிலையம் முற்றுகை

கிளிநொச்சியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்று கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய குளம் பகுதியில் பெரும் காடுகள் காணப்படுவதால், அப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தர்மபுரம் பொலிஸாரால் பாரியளவு கசிப்பும், கோடாக்களும்கைப் பற்றப்பட்டன.

அதனைத்தொடர்ந்து அதே பகுதியில் கசிப்பு உற்பத்திக்காக குளத்தின் நடுப்பகுதியில் தண்ணீருக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பரல் கோடாவை கிளிநொச்சி பொலிஸார் மற்றும் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் சங்கம் மற்றும் கிராம இளைஞர்கள் அனைவரும் இணைந்து வெள்ளிக்கிழமை நேற்று மீட்டுள்ளனர்.(ம-7)

# மரண அறிவித்தல்

## தனபாக்கியவதி பொன்னம்பலம்



'இலக்குமி வாசா', கரணவாய் மத்தி, கரவெட்டியைப் பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட தனபாக்கியவதி பொன்னம்பலம் அவர்கள் 10.11.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் (R.P Master) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இரகுநாதன், புஸ்பநாதன், குணபாக்கியவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வாசுகி, ரேணுகா(ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.அஜந்தன், Dr.வசிகரன்(மாகாணப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.உமேசன், சௌமியா, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.11.2023 (சனிக்கிழமை) இன்று மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

வாசுகி : 077 779 7356
ரேணுகா : 077 589 8141

(C-7602)


## சொர்க்கம் திருமண சேவை

- கனடாவில் வசிக்கும் 36 வயது ஆயிலியம் நட்சத்திரம் (Engineering) மணமகனுக்கு தகுந்த மணப் பெண்ணை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- 1995 இல் பிறந்த பூசம் நட்சத்திரம் (Teacher) மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகனை(Goverment job) இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- பிரான்ஸில் வசிக்கும் 39 வயது ஆயிலியம் நட்சத்திரம் மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

(17834)

தொடர்புகொள்ள சொர்க்கம் திருமண சேவை

**001 416 666 1855(கனடா)**
**077 887 6969**
**077 650 5097(யாழ்ப்பாணம்)**

## காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை

(17835)

**076 057 0354,**
**077 623 4204, 076 755 8606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு : ஜெயம் (17838)

**077 814 7389,**
**077 986 5457**


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேசசபை - உப அலுவலகம் மயிலிட்டி

விண்ணப்பதாரர் : நல்லையா சூரியகுமார் பெண் புஸ்பமலர்
முகவரி : ஈழுகேசரி பொன்னையா 1 ஆம் வீதி

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை மயிலிட்டி உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் 16 ஈழுகேசரி பொன்னையா 1 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் முகதாவில் 3423 ஆம் இலக்கத்தில் 19.01.2019 திகதியில் முடிந்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் நல்லையா சூரியகுமார் பெண் புஸ்பமலர்க்கு உறுதி எழுதப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை மயிலிட்டி கோவிற்பற்றும் வறுத்தலை விளான் இறை "கணமுலவை" நிலப்பரப்பு 10 குழி 4.90 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி.தங்கராசா அவர்களின் வரைபட இலக்கம் 8999 வரைபடத்தின்படி துண்டு 01 ஆக காட்டப்பட்டுள்ளது இதன் எல்லைகள்

**கிழக்கு - நல்லையா நேசமலருக்குரிய ஆதனம்**
**வடக்கு - தியாகராசா பெண் சிவபாக்கியத்துக்குரிய ஆதனம்**
**மேற்கு - றோட்டு**
**தெற்கு - றோட்டு**

மேற்குறித்த ஆதனத்தை நல்லையா சூரியகுமார் பெண் புஸ்பமலர் எனும் பெயரில் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.(கொல்லங்கலட்டி)

(C-7601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி பத்திரிகை அலுவலகத் திறப்புவிழா - 10.11.2023






பொ.பாலசுந்தரம்பிள்ளை தம்பதியர் தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தனர்.



செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கணனிப் பகுதியைத் திறந்து வைத்தார்.



வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதியர் ஆசிரியர் பீடத்தைத் திறந்து வைத்தனர்.



வலம்புரி நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் அவர்கள் விளம்பரப் பிரிவை திறந்து வைத்தார்.



அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் இயந்திரப்பிரிவை திறந்து வைத்தார்.



யாழ்ப்பாணம் பிரம்மகுமாரிகள் அமைப்பின் பிரதிநிதிகள் நிர்வாகப் பிரிவை திறந்து வைத்தனர்.



கட்டடத்தை நிர்மாணித்த றம்சன்ராஜ் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



திறப்புவிழா நிகழ்வில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 5 விக்கெட்டால் ஆப்கானிஸ்தானை வென்றது தென்னாபிரிக்கா





உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி தென்னாபிரிக்கா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 42ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

குறித்த போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, அந்த அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக அஸ்மத்துல்லா உமர்சாய் 97 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், தென்னாபிரிக்க அணியின் ஜெரால்ட் கோட்ஸி 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 245 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 47.3 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக, ராஸ்ஸி வென் டெர் டுசென் 76 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், ஆப்கானிஸ்தான் அணியின் மொஹம்மட் நபி 35 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக 76 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்க அணியின் ராஸ்ஸி வென் டெர் டுசென் தெரிவானார். (ம-7)




## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 8 | 8 | 0 | 16 |
| 2 | தென்னாபிரிக்கா | 9 | 7 | 2 | 14 |
| 3 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 12 |
| 4 | நியூசிலாந்து | 9 | 5 | 4 | 10 |
| 5 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 9 | 4 | 5 | 8 |
| 7 | இங்கிலாந்து | 8 | 2 | 6 | 4 |
| 8 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 4 |
| 9 | இலங்கை | 9 | 2 | 7 | 4 |
| 10 | நெதர்லாந்து | 8 | 2 | 6 | 4 |


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1968 . 07 . 17

உதிர்வு 2016 . 11 . 27

யாழ்.ஆதியாமலை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### அமரர் சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)

திதி : 11.11.2023

எட்டாத் தூரத்திற்கு எமை விட்டுச் சென்று
இன்றுடன் ஏழு ஆண்டுகள் ஆனது
பலரும் காண படுத்துறங்கினாய் – நிரந்தரமாய்
பட்டாலும் பலர் நெஞ்சில் வாழ்கின்றாய்
பாவம் என்ன செய்தாயோ பாதை முடிய
காலனவன் கணக்கெடுப்பில் கண்கொண்டான்
காலம் முடியும் முன் கண்ணிமைத்த உனக்காய்
கடவுளை வேண்டுகிறோம் ஆத்மா சாந்தியடைய

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

தகவல் :சுப்பிரமணியம் இராஜேஸ்வரி (சகோதரி)

(17840)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வாழ்வில் இன்று

# தவிர்க்க முடியாத இடத்தில் ‘வலம்புரி’

## வலம்புரி பத்திரிகை காரியாலய திறப்பு விழாவில் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை



**(யாழ்ப்பாணம்)**

**24 வருடங்களாக சிறப்பாக இயங்கி வரும் வலம்புரி பத்திரிகை நிறுவனம் மென்மேலும் வளர்ந்து இன்று உயர்நிலையை அடைந்துள்ளமை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது என யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.**

நேற்று இடம்பெற்ற வலம்புரிப் பத்திரிகையின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவபக்தியுடனும் சமய பக்தியுடனும் பல்வேறு முறையில் இந்த நிறுவனத்தை நேர்மையாகவும் சிறப்பாகவும் வழிநடத்திய மையால் தமிழ் மக்கள் மத்தியில் இன்று மிக முக்கியமான பத்திரிகையாக வலம்புரி திகழ்கின்றது.

தமிழ் மக்களை வழி நடத்துகின்ற ஆசிரியர் தலையங்கங்கள், மாணவர்களுக்கு அறிவுரை வழங்குகின்ற சிறுவர் பகுதி எனப் பல்வேறு சிறப்புகளுடன் வெளிவரும் இந்தப் பத்திரிகை தமிழ்ச் சமூகத்தை நன்னெறிப்படுத்துவதுடன் பல்வேறு நிலையிலுள்ளவர்களைத் துடிப்பாக இயங்க வைக்க பலதரப்பட்ட கருத்துக்களை முன்வைத்து ஊக்கமளிக்கிறது.

தற்போதைய நிலையில் தொழில்வாய்ப்பினை பெறுவது மிகவும் கடினம். அத்தகைய சூழலில் மிகப்பெரிய ஒரு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுக்கின்ற நிறுவனமாகவும் இது இயங்கிக் கொண்டு இருக்கிறது.

வலம்புரிப் பத்திரிகை நிறுவனம் மென் மேலும் வளர எனது மனப் பூர்வமான வாழ்த்துக்கள் என்றும் அவர் தெரிவித்தார்.(நி-5-6)

# வீதியினை இடைமறித்து விவசாயிகள் போராட்டம்



(சாவகச்சேரி)

காரைநகர் -மானிப்பாய்-யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மூளாய் பகுதியில் வீதியினை இடைமறித்து வீதியில் நெல் விதைத்து நூதனமான முறையில் பிரதேசவாசிகள் நேற்று காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மானிப்பாய் காரைநகர் வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக வீதி அபிவிருத்தி கள் இடைநிறுத்தப்பபட்டிருந்தது.

இந்நிலையில் பொன்னாலை மற்றும் மூளாய் பகுதியினை சேர்ந்த விவசாயிகள் ,சிறுவர்கள் , பொதுமக்கள் இணைந்து காரைநகர் மானிப்பாய் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உழவு இயந்திரம் மற்றும் மாட்டு வண்டிலை கொண்டு இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பொழுது ரணில் அரசாங்கமே எங்கள் மீது ஏன் இந்த பாரபட்சம்!வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளே உங்களுக்கு கண் இல்லையா! சைக்கிள் உடைகிறது சட்டை சேறாகிறது நடந்து சென்றால் கால்கள் புண் ஆகிறது! அரச அதிகாரிகளே எங்களையும் பாருங்கள்! வழக்கம்பரை முதல் பொன்னாலைவரை வாழும் மக்கள் மந்தைகளா? ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சுமார் ஒரு மணித்தியாலமாக குறித்த வீதியின் போக்குவரத்து தடைப் பட்டிருந்தது. போராட்டத்தில் மூளாய் பொன்னாலை பகுதி சிறுவர்கள் ,விவசாயிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-30)

# தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகள்

## முடிவுக்கு வந்தது வேலை நிறுத்தம்

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் ஆரம்பித்த 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. சுற்றுலா விடுதிகள் திறப்பு என்ற போர்வையில் நுவரெலியா தபால் நிலைய கட்டடம் மற்றும் கண்டி தபால் நிலைய கட்டடம் விற்பனை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் ஊழியர்கள் கடந்த 8 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதன்படி நேற்று முன்தினம் நள்ளிரவுடன் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாக குவிந்துள்ள சுமார் 10 இலட்சம் தபால் பொருட்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.(நி-5-6)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலக வாயிலை மூடி மீனவர்கள் போராட்டம்

## மகஜரும் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய கடற்றொழிலாளர்களை தொடர்ந்தும் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலக வாயிலை மூடி நேற்று வெள்ளிக்கிழமை கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.**





போராட்டத்தின் போது, இந்திய மீனவர்களே எமது கடல் வளங்களை அழிக்காதே, கடற்படையே அத்துமீறிய இந்திய மீனவர்களை கைது செய், கடற்றொழில் அமைச்சரே! ஜனாதிபதியே! எமது கோரிக்கைகளை நிறைவேற்று என கோஷங்களை எழுப்பினர்.

யாழ்.மாவட்ட மேலதிக செயலர், மருதலிங்கம் பிரதீபனிடம் கடற்றொழில் அமைச்சர் மற்றும் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மகஜர்களை கையளித்தனர். குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது, அத்துமீறி எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமான இழுவை மடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை தாங்கள் அறிந்ததே. இதன்காரணமாக கடற்றொழிலாளர்களாகிய எங்களின் வாழ்வாதாரமும் எமது கடல் வளங்களும் அழிக்கப்படும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. தொடர்ச்சியாக, எங்களது கடற்பரப்பில் நுழைகின்ற நூற்றுக்கணக்கான இந்த ரோலர் வருகையால் மீன் உற்பத்திக்கு ஏதுவான பவளப் பாறைகள் அழிக்கப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் எமது கடற்பரப்பில் கடலுணவுகள் அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் மக்களுக்கு தேவையான புரதச்சத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாகி வருகின்றது.

இந்த நிலை தொடருமானால் கடற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்காலத்தில் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நி-5-6-33)

# கண்டாவளை கமநல சேவை நிலையத்தில் தீ வைத்த விஷமிகள்- தளபாடங்கள் சேதம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை கமநல சேவை நிலையத்தில் பொருட்களுக்கு விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது

கண்டாவளை கமநல சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை அலுவலக கடமைகள் முடித்து அலுவலகம் பூட்டப்பட்ட பின்னர் அங்கிருந்த கதிரை மற்றும் ஆவணங்கள் சிலவற்றிற்கும் விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

தீ எரிவது தொடர்பில் அவதானித்த கடமைக்கு வந்த காவலாளி சம்பவம் தொடர்பில் உரிய அதிகாரிக்கு தகவல் வழங்கியதை அடுத்து உடனடியாக தீ அணைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஏற்கனவே குறித்த கமநல சேவை நிலையத்தின் பெயர் பலகை சேதமாக்கப்பட்டுள்ளதுடன் கற்கள் மற்றும் வெற்றுப் போத்தல்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் அக்கறை காட்டாத அரசாங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரை கரிசனை காட்டவில்லை என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் வடமாகாண இணைப்பாளர் ஜட்சன் பிரகடோ தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்ற இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் இணைப்பாட்சிக் கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சி நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கைத் தீவின் ஆட்சி முறைமை ஆரம்ப காலத்தில் பல இராட்சியங்களைக் கொண்டிருந்ததும் பின்னர் காலனித்துவ ஆட்சியாளர்களின் கீழ் கொண்டு வரப்பட்டதும் நாம் அறிந்த விடயங்கள்.

ஆயுதப் போராட்டமானது 1983இல் யுத்தம் தீவிரமடைந்து 26ஆண்டு காலம் நீடித்து 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது. இருப்பினும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படாமையால் இன்று தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வுக்கான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இருப்பினும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரை கரிசனை காட்டவில்லை என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-5-6-30)

# அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கு- கிழக்கில் கால்பதிக்கும் சீனா

## செல்வம் எம்.பி

(மன்னார்)

வடக்கிலோ கிழக்கிலோ சீனாவினுடைய எந்த முதலீட்டையும் அனுமதிக்கக் கூடாது. அதை நாங்கள் எதிர்ப்போம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் ரெலோ அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையிலே ஒரு பொதுநல நோக்கோடு சீனாவின் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. மாறாக தங்களுடைய இலாபத்தை கருத்தில் கொண்டே சீனா செயற்படுகின்றது.

தன்னுடைய லாபம் கருதியே இலங்கை அரசாங்கத்திற்கு சீன அரசாங்கம் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது.

இப்பொழுது சீனா மீண்டும் வடக்குக் கிழக்கிலே குறிப்பாக வடக்கை தன்னகத்தே கொண்டு வருவதற்கான நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்றது. சீனாவினுடைய தூதுவர் வடக்கிலே பல இடங்களுக்கு விஜயம் செய்து உணவுப்பொதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். அதே நேரம் மீனவர்களுக்கும் மீன் வலைகளை வழங்குகின்றார்.

மீனவர்களை தன்னகத்தே கொண்டுவந்தால் வடக்கில் உள்ள கரையோர பகுதிகளில் தன்னுடைய இலாபம் கருதி அட்டைப்பண்ணை உட்பட ஏனைய விடயங்களை மேற்கொண்டு வடக்கில் உள்ள முழுமையான நிலங்களையும் அபகரிக்கின்ற நினைப்பிலே சீனா செயற்படுகிறது.

எங்களுடைய பிரதேசத்தை மையமாக கொண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் முரண்பாடுகள் தோன்றுகின்ற போது எங்களுடைய பிரதேசம் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படும்.

இந்தியாவுக்கும் எங்களுக்கும் இந்த மீனவர்கள் சம்பந்தமாக பிரச்சினைகள் இருந்தாலும் இந்தியாவை விட்டு நாங்கள் வேறு எந்த நாட்டின் பக்கம் நிற்கின்ற வாய்ப்புகள் மிக குறைவாக இருக்கிறது. ஏனென்றால் எங்களுக்கு பிரச்சினை என்றால் இந்தியாதான் முன்னுக்கு வருகின்ற ஒரு சூழல் இருக்கின்றது.

அந்த வகையிலே நாங்கள் இந்தியாவை பகைத்துக் கொண்டு அல்லது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள் முரண்பாடுகள் காரணமாக வடக்குக் கிழக்கிலே பாதிப்பு ஏற்படுகின்ற சூழலை அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5-6-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 450 |
| தக்காளி | 250 | 250 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 160 |
| கோவா | 350 | 300 | 300 | 350 |
| கரட் | 400 | 360 | 350 | 400 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 250 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 300 | 300 | 300 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 250 | 200 | 220 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 200 |
| பயிற்சிங்காய் | 400 | 500 | 280 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 150 | 160 | 180 | 250 |
| கறிமிளகாய் | 500 | 350 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 350 | 500 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 320 | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 120 | 1400 | 1300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 400 | -- | 480 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 26, பாச்சு முதலாம் ஒழுங்கை, 30/1 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மனுவல் பெண் அன்னமுத்து என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் குருநகர், சின்னக்கடை, சென்யேம்ஸ் வீதி இல. 30/1 சவிரியான் மத்தியூஸ் பெண் மேரி றோஸ் அவர்கள் 01.09.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் உறுதி இல. 697 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பேர்த்தியார் திருமதி.அன்னமுத்து மனுவலுக்குச் சொந்தமாகவிருந்து அவர் காலஞ்செல்ல அவரது ஏகவாரிசான தனது தந்தையார் காலஞ்சென்ற மனுவல் செபஸ்தியானுக்கு வந்தடைந்த முதுசமாகும். இவ்வாதனமானது தனது தாயாராலும் சகோதரர்களாலும் நன்கொடையாக முறையான உறுதி மூலமாகவன்றி வாய்ச்சொல் மூலமாக வந்தடைந்து என்றும் எவராலும் பாராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும் தனது தொடர்ச்சியான நீண்டகால ஆட்சியுடையதுமான ஆதனமாகும் என வெளிப்படுத்துகின்றார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் குருநகர், சின்னக்கடை, சென்யேம்ஸ் வீதி இல.30/1 சவிரியான் மத்தியூஸ் பெண் மேரி றோஸ் 01.09.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 698 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் ஸ்ரனிஸ்லோஸ் அருள்நாயகம் பெண் மேரி குயின்ராவிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டுக்குளி கோவிற்பற்று குருநகர் இறை "குடியிருப்பு வளவு" சென்யேம்ஸ் மேற்கு வீதியில் வரிமதிப்பு எண் 30/1 கொண்டதும் உத்தரவு பெற்ற அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை 25.11.1986 ஆம் திகதியில் அளந்து பிரிவிட்டு வரைந்த 1156 ஆம் இலக்கப்படத்தின்படி துண்டு 1,3 எனச் சுட்டப்பட்ட பாகங்கள் சேர்த்து குளி (4.69) நான்கு தசம் ஆறு ஒன்பது வீடும் மற்றுமதற்குரியவைகளும். இதன் எல்லை,

கிழக்கு -குறித்த படத்தில் துண்டு 4 எனச் சுட்டப்பட்ட பாகம்.
வடக்கு - மார்க்கண்டு தருமுவுக்கும், லோறென்சுவுக்குமுரிய ஆதனம்.
மேற்கு -குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் சென்யேம்ஸ் மேற்குவீதியும்
தெற்கு -செபஸ்தேயு சேவியரின் ஆதனம் இதடங்கலும்.

தற்போது ஸ்ரனிஸ்லோஸ் அருள்நாயகம் பெண் மேரி குயின்ரா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து. குறித்த ஆதனமானது ஸ்ரனிஸ்லோஸ் அருள்நாயகம் பெண் மேரி குயின்ரா என்னும் பெயர்களிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-7594)

# தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(கொழும்பு)
நாடளாவிய ரதீயில் உள்ள தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்னாநாயக்கவினால் எழுப்பப்பட்ட வாய்மொழிமூல வினாக்களுக்கு பதிலளிக்கும் போதே, கல்வி இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றில் இதனை குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)






# இராசிபலன்

11.11.2023
ஐப்பசி 25, சனிக்கிழமை
திரயோதசி பிற்பகல் 02.16 மணிவரை

சித்திரை பின்னிரவு 2.36 மணிவரை
சுபநேரம் -03.06-4.36 மணிவரை
இராகுகாலம்-9.06-9-10.36மணிவரை

சந்திராஷ்டமம் - உத்திரட்டாதி.

வளவன்

**மேஷம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், உடல்நலன் சீராகும், பொன்னான நாள்.

**கடகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்** உடல்நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பிள்ளைகள் வழியில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**கன்னி** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மீனம்** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

நீ பட்ட துன்பத்தை விட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 327





பிறகு அங்கிருந்து என் கண்களும் நகரவில்லை கவனமும் பெயரவில்லை. அந்த முகம் வரவரப் பெரிதாகி வந்தது என் அருகே வருவது போலிருந்தது. கடைசியில், அந்தப் பெரிய ஜனத்திரள் முழுவதும் மறைந்து, என் அருகில் நின்றவர்கள் எல்லாரும் மறைந்து, ஆசார வாசல் மறைந்து, தஞ்சை நகரின் கோட்டை கொத்தளம் மறைந்து, வானும் மண்ணும் மறைந்து, அந்த ஒரு முகம் மட்டும் தேவி பரமேசுவரியின் விசுவரூபத்தைப் போல் என் கண் முன்னால் தோன்றியது. என் தலை சுழன்றது கால்கள் பலமிழந்தன் நினைவு தவறியது.

“அப்படியே நான் மயங்கி விழுந்து விட்டதாகவும் பக்கத்திலிருந்தவர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டதாகவும் பிற்பாடு அறிந்தேன். பட்டாபிஷேக வைபவச் சடங்குகளில் நான் அதிகம் களைத்துப்போய் விட்டதாக மற்றவர்கள் நினைத்தார்கள். ஜனங்களுக்குக் காட்சி அளித்தது போதும் என்று என்னை அரண்மனைக்குள்ளே அழைத்துச் சென்றார்கள். பிறகு எனக்கு நல்ல நினைவு வந்ததும் என் நண்பன் அநிருத்தனைத் தனியாக அழைத்து, நான் கண்ட காட்சியைக் கூறினேன். அந்த ஊமைப் பெண்ணின் அடையாளம் கூறி எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து அழைத்து வரவேண்டும் என்று கட்டளையிட்டேன். தஞ்சை நகரின் மூலை முடுக்கெல்லாம் தேடியும் அத்தகைய ஊமைப் பெண் யாரும் இல்லையென்று அநிருத்தன் வந்து சொன்னான். என்னுடைய உள்ளத்தின் பிரமையாக இருக்குமென்றும் கூறினான். நான் அவனைக் கோபித்துக்கொண்டு “இந்த உதவி கூடச் செய்யாவிட்டால் அப்புறம் நீ என்ன சிநேகிதன்?” என்றேன். தஞ்சைக் கோட்டைக்கு வெளியே கடற்கரையை நோக்கிச் செல்லும் பாதைகளில் ஆள் அனுப்பித் தேடும்படி சொன்னேன். அப்படியே பல வழிகளிலும் ஆட்கள் சென்றார்கள். கடற்கரை வரையில் போய்த் தேடினார்கள். கோடிக்கரைக்குப் போனவர்கள் அங்கேயுள்ள கலங்கரை விளக்கக் காவலன் வீட்டில் ஓர் ஊமைப் பெண் இருப்பதாகக் கண்டு பிடித்தார்கள். அவள் பித்துப் பிடித்தவள் போலத் தோன்றினாளாம். எவ்வளவோ ஜாடைமாடைகளினால் அவளுக்கு விஷயத்தை தெரிவிக்க முயன்றதும் பயன்படவில்லையாம். அவர்களுடன் தஞ்சைக்கு வருவதற்கு அடியோடு மறுத்து விட்டாளாம். இந்தச் செய்தியை அவர்கள் கொண்டு வந்தவுடன், இன்னது செய்வதென்று தெரியாமல் மனங் கலங்கினேன். இரண்டு நாள் அந்தக் கலக்கத்திலேயே இருந்தேன். ஆனமட்டும் அவளை மறந்துவிடப் பார்த்தும் இயலவில்லை. இரவும் பகலும் அதே நினைவாயிருந்தது. இரவில் ஒருகணங்கூடத் தூங்கவும் முடியவில்லை. பிறகு அநிருத்தனையும் அழைத்துக் கொண்டு கோடிக்கரைக்குப் புறப்பட்டேன். குதிரைகளை எவ்வளவு வேகமாகச் செலுத்தலாமோ அவ்வளவு வேகமாகச் செலுத்திக் கொண்டு போனேன். போகும் போது என் மனக்கலக்கம் இன்னும் அதிகமாயிற்று. அந்த ஊமைப் பெண்ணை அங்கே கண்டுபிடித்தால், அப்புறம் அவளை என்ன செய்வது என்று எண்ணிய போது மனம் குழம்பியது. தஞ்சைக்கோ பழையாறைக்கோ அழைத்துப் போய் ‘இவள் என் ராணி!’ என்று சொல்லுவதா? அவ்வாறு நினைத்தபோது என் உள்ளமும் உடலும் குன்றிப் போய் விட்டன.

“என் செல்வக் குமாரி! அந்த நாளில் நான் மேனி அழகில் நிகரற்றவன் என்று வேண்டாத பிரபலம் ஒன்று எனக்கு ஏற்பட்டிருந்தது. அதை ஒரு புகழாகவே நான் நினைக்கவில்லை. ஆயினும் மற்றவர்கள் அதைப் பற்றி ஓயாது பேசினார்கள்.

என் பாட்டனாரின் பெயராகிய ‘பராந்தகன்’ என்னும் பெயரை எனக்கு வைத்திருந்தும், அது அடியோடு மறையும்படி செய்து ‘சுந்தர சோழன்’ என்ற பெயரைப் பிரபலப் படுத்தி விட்டார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வருமுன் காப்போம்

(நேற்றைய தொடர்ச்சி...)

சிறிது நேரத்தில் வலைவிரிப்பதாக சொன்ன இருவரும் பெரிய வலையை எடுத்து வந்து எங்கே வலை வீசுவது என்று பேசினார்கள். அவ்வளவு தான் அதைக் கேட்டு சோமு “அய்யோ கடவுளே!, ராமு அப்போவே சொன்னதே, இரவே தப்பியிருக்கலாமே” என்று புலம்பியது.

ஆனால் தாமு அந்த சூழ்நிலையிலும் கொஞ்சமும் பயப்பட வில்லை, “ஏன் பயப்படுகிறாய், குளத்தில் எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன, நாம் மறைந்துக் கொள்ளலாம்” என்றது.



சோமு கொஞ்சம் கொழு கொழு மீன், அதற்கு பயம் வந்து விட்டது, அதற்குள் மீனவர்கள் வலை வீச, தாமூ ஓடி ஒளிந்துக் கொண்டது. சோமு மாட்டிக் கொண்டது, வலையில் இருந்து தன்னை விடுவிக்க படாத பாடு பட்டது, இறுதியில் சோமுவின் வால் பகுதியும் முதுகும் சேதமடைந்து, வலையில் இருந்து விடுபட்டு நீரோடையில் பாய்ந்து தப்பி விட்டது. உடல் எங்கும் ரத்தம், வரும் முன்னால் காக்காமல் வந்த போது காக்க நினைத்த தன் முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.

தாமு குளத்தின் உள்ளே இருந்த பாறையின் அடியில் ஒளிந்து கொண்டது, தான் வீரமாக தப்பியதை நினைத்து பெருமைப்பட்டது. அது ரொம்ப நேரம் நீடிக்க வில்லை. வந்த இருவரில் ஒருவர் நீண்ட கம்பை எடுத்து குளத்தின் அடியில் இருக்கும் பாறைகளில் செலுத்தி அசைத்தார். அவ்வாறு செய்கையில் ஒரு முறை அந்த கம்பானது தாமுவை தாக்கியது, தாமு தப்பிக்க நினைத்து அதிலிருந்து வெளியே வர, அங்கே இருந்த வலையில் மாட்டிக் கொண்டது.

சிறிது நேரத்தில் மீனவர்கள் வலையை வெளியே எடுத்து மாட்டிய அனைத்து மீன்களையும் தரையில் போட்டு கொன்றார்கள். அதில் தாமுவும் ஒரு மீன்.

வரும்முன் காப்போம் என்ற கொள்கை கொண்ட ராமு ஒரு ஆபத்தும் இல்லாமல் தப்பி, மகிழ்ச்சியாக வாழ்ந்தது, வந்த போது காப்போம் என்ற கொள்கை உடைய சோமு, உடல் எங்கும் காயப்பட்டு, மற்ற மீன்களுக்கு பயந்து பயந்து வாழ்ந்தது. வந்த பின்பு பார்ப்போம் என்ற கொள்கை உடைய தாமுவோ கொல்லப் பட்டு விட்டது.

குழந்தைகளே! இக்கதையானது நம் அனைவருக்கும் நல்ல பாடம். எந்த விசயத்தையும் வரும் முன்பே யோசிக்க வேண்டும், மழைக் காலம் என்றால் வெளியே செல்லும் போது கையில் குடை இருக்க வேண்டும். தேர்வு வருகிறது என்றால் ஒரு வாரத்திற்கு அனைத்துப் பாடங்களையும் படித்து முடிக்க வேண்டும். கடைசி நேரத்தில் படிக்கத் தொடங்கினால் அது பயன் அளிக்காது, எனவே நாம் எப்போவும் வரும்முன் காப்போம் என்ற கொள்கையை பின்பற்ற வேண்டும், பின்பற்றினால் கவலையின்றி வாழலாம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நரகாசுரனுக்காக விடுமுறை சூரனுக்கு பதில் பாடசாலை

வலம்புரிப் பத்திரிகையில் பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை என்ற பகுதியில் ஓர் அன்பர் சொல்கிறார்; தீபாவளிக்கு ஆகிற செலவைப் பார்க்கும்போது, கிருஷ்ணர் நரகாசுரனை மன்னித்து விட்டிருக்கலாம் போல தோன்றுகிறது என்று.

அவர் கூறியது நகைச்சுவையாக இருந்தாலும் அதற்குள் ஆழமான உண்மை உறைந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

ஆம், பண்டிகைகள் மனிதர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் அமையப் பெற்றவை.

தவிர, நாம் கொண்டாடுகின்ற பண்டிகைகள் பண்டிகைகளே அல்ல. அவை எம்மிடம் இருக்கின்ற தீய குணங்களை வேரறுத்து ஞானத்தை பெறும் பொருட்டு புனிதமாக வழிபட வேண்டிய நாட்கள்.

எம்மிடம் இருக்கின்ற தீய குணத்தை அசுரர்களாக சித்திரித்து அந்த அசுரர்கள் தெய்வ அவதாரங்களால் அழிக்கப்படுவதாக அமையப் பெற்ற கதைகள் நாம் சார்ந்தவையே.

அதாவது நம்முள் இருக்கக்கூடிய தெய்வத்தை நாம் உணர்ந்து கொண்டால், நமக்குள் இருக்கின்ற அசுரத்தனங்கள் கொல்லப்பட்டு விடும்.

அசுரத்தனம் அழிந்தால், தெய்வீகம் நம்முள் பிரகாசிக்கும். தெய்வீகம் ஒளிமயமானது.

அதனையே அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றார்கள்.

ஆம், உள்ளத்தில் (அகம்) அசுரத்தனம் ஆட்சி செய்தால் முகம் இருள்மயமாகும். மாறாக உள்ளத்தில் தெய்வீகம் குடிகொண்டால், அகம் ஒளிமயமாகும்.

இதனையே தீபாவளி, விஜயதசமி, சூரன் போர் உள்ளிட்ட நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன.

இதை நாம் கூறும்போது ஐயா, தலைப்பு ஏதோ சொல்கிறது. நீங்கள் ஏதோ தத்துவம் பேசுகிறீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம்.

நாம் இங்கு குறித்துரைக்க வந்த விடயம் நாளை ஞாயிற்றுக்கிழமை தீபாவளித் திருநாள்.

வழமையில் தீபாவளித் திருநாளுக்கு அரச விடுமுறை. எனினும் இம்முறை தீபாவளி ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால், விடுமுறைக்கு விடுமுறை இல்லை.

இதற்காகவோ என்னவோ தீபாவளிக்கு மறுநாள் திங்கட்கிழமை நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்கப்பட்டு, அதற்காக இம்மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை பதில் பாடசாலை நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சரி நல்லது தானே! என்றால் அங்குதான் குழப்பமே உள்ளது.

அதாவது எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை சூரன்போர்.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதிநாள் சூரன் போர் நடைபெறும். தவிர, அன்று சனிக்கிழமையாக இருப்பதால் இயல்பாகவே விடுமுறை நாளாகிறது.

ஆனால் நரகாசுரனுக்காகத் திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய அரசாங்கம் அதற்குப் பதில் பாடசாலை தினத்தை தீர்மானிக்கும்போது அந்த நாள் சூரன்போர் என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை.

இங்குதான் தீர்மானங்கள் எடுப்பதில் எங்கள் நாட்டின் இலட்சணம் எவ்வாறாக உள்ளதென்பது புரிகிறது.

என்ன செய்வது நரகாசுரனுக்காக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய அரசாங்கம் சூரன்போரன்று பதில் பாடசாலை நடத்துகிறது. யாம் என் செய்வோம் பராபரமே

## புத்தளத்தில் கடும் வெள்ளம் 11,586 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையினால் புத்தளம் மாவட்டத்தில் 11,586 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வான் கதவுகள் திறக்கப்பட்டமை மற்றும் வெள்ளம் காரணமாகவே இவ்வாறு வெள்ளம் பெருகியுள்ளதாக அந்த மாவட்ட செயலாளர் எச்.எம். எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார். (நி-5-6)

## அறுவடைக்குத் தயாராகவிருந்த 12,000 ஏக்கர் நெல் மழையினால் அழிவு

### விவசாய அமைச்சு

(கொழும்பு)

அறுவடைக்கு தயாராகவிருந்த 12.000 ஏக்கர் நெற்செய்கை மழையினால் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் ஒன்றரை மாதங்களாக பெய்து வரும் மழையினால். சில பகுதிகளில் வயல் நிலங்களுக்கு பாரியளவு சேத மேற்பட்டுள்ளதாகவும் வெள்ள நிலைமையால் நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் நிலவிய வறட்சியினால் 64.088 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாதிப்படைந்த செய்கை நிலங்களுக்கான இழப்பீட்டை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு விவசாய மற்றும் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர வும் விவசாய காப்புறுதி சபையின் தலைவரும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளனர். (நி-5-6)

## இலங்கை கிரிக்கெட் அணி சிங்களவருக்கு மட்டும் உரியதா?

### வினோ எம்.பி சபையில் கேள்வி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட்டுக்குள் இனப்பாகுபாடு காட்டப்படுவதாகவும் அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், இது இலங்கை அணி அல்ல எனவும் இது ஒரு சிங்கள அணி என்ற நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இருந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு இலங்கைக்குள்ளேயே போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும் வன்னி மாவட்டத்திலே கிளிநொச்சி. மன்னார். முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து கிரிக்கெட் சபையிலே வாக்களிக்கின்ற உரிமை மறுக்கப்பட்டவர்களாக குறித்த மாவட்ட சம்மேளனங்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

## பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது குறித்த பகுதியை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை

### ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற போது, அந்தந்த மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த அரசாங்க பிரதிநிதிகளுக்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்தில் உள்வாங்கப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை வடக்கு -கிழக்கு பகுதியில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது கருத்தினை வெளிப்படுத்தினார்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் குறித்த திட்டத்தின் ஊடாக உள்வாங்கப்பட்டவர்கள் இருக்கின்ற நிலையில், பிற மாவட்டங்களை சேர்ந்தவர்கள் நியமிக்கப்படும் பட்சத்தில், குறித்த விவகாரம் ஓரவஞ்சனையான தீர்மானங்களாக பாதிக்கப்படுகின்றவர்களினால் பார்க்கப்படும் என்பதுடன் தேவையற்ற அரசியல் குழப்பங்களுக்கும் வழி வகுக்கும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, எதிர்காலத்தில் அரசாங்க நிறுவனங்களில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அந்தந்த மாவட்டத்தினை சேர்ந்தவர்கள் மூலமே வெற்றிடங்களை நிரப்புவதற்கு முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த ஏழு சிற்றூழியர்களை நியமிப்பதற்கான முன்னெடுப்புகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய இடைநிறுத்தப்பட்டிருந்தது டன், கடற்றொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களை திருப்பி அழைப்பதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-5-6)

## ஆணையிறவில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது

(முறிகண்டி)

ஆணையிறவு பகுதியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து 21 வயதுடைய இளைஞர் ஒருவர் 390 கிராம் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் கஞ்சாவினை எடுத்துச் செல்லும் போது கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (நி-5-6-100)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2023
'கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்'
-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

### அடுத்த வருடம்

## உணவுப்பொருட்களின் விலையை குறைக்கத் திட்டம்

### வர்த்தக அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க திட்டமிட்டுள்ளோம் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக வரிகளை அதிகரிக்க வேண்டியேற்பட்டது.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டிருப்பார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

எனவே நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.

2024 இல் உணவு பாதுகாப்பு தொடர்பில் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டம்




**(தருமபுரம்)**

**கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுத் திட்டத்திற்கு எதிராக அப்பிரதேச பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவில் 1200 ஹெக்டேயர் பரப்பளவில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்வதற்கு டோக்கியோ நிறுவனம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், பலாவி அனைத்து மக்கள் ஒன்றியம் சார்பாக பொதுமக்கள் நூறாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேரவில் மண்ணை சுடுகாடு ஆக்காதே, வேண்டாம், வேண்டாம் சீமெந்து கம்பனி வேண்டாம், சுண்ணக்கல் அகழ்வை உடன் நிறுத்து போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் ஈடுபட்டனர்.

குறித்தி நிறுவனத்தினரால் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுமாயின் தங்களது பூர்வீக கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்து வாழ முடியாத சூழல் ஏற்படும் என்பதால் இதற்கு அனுமதிக்ககூடாது என தெரிவித்து தொடர்ந்து போராடி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-316)

## பெரியகுளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி முற்றுகை



(தருமபுரம்)

கிளிநொச்சி, பெரியகுளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸார், மாதர் சங்கம் மற்றும் பொதுமக்கள் இணைந்து முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பரல் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் தருமபுரம் பொலிஸாரால் பாரியளவு கசிப்பு கோடாக்கள் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பளைப் பகுதியில் வீட்டுப்பொருட்கள் திருட்டு

(கிளிநொச்சி)

மருத்துவமனைக்குச் சென்ற நபரது வீட்டில் இருந்த தொலைக்காட்சிப்பெட்டி உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பளை பகுதியிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று வீட்டின் உரிமையாளர் வீட்டை பூட்டிவிட்டு யாழ்.போதனா மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அவர் வீட்டுக்கு திரும்பிய வேளை வீட்டின் கதவு திறந்திருந்துள்ளதோடு, வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, மின் மோட்டார் உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்கள் திருட்டு போயுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக மன்னாரில் முஸ்லிம் மக்கள் போராட்டம்

(மன்னார்)

பாலஸ்தீனம் மற்றும் காசா பகுதிகளில் இஸ்ரேல் படைகளினால் அப்பாவி பெண்கள், சிறுவர்கள் கொன்று குவிக்கபடுவதற்கு எதிராகவும் இஸ்ரேல் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இனவழிப்புக்கு எதிராக நேற்று சிலாவத்துறை சுற்றுவட்ட பகுதியில் ஒன்று கூடிய முஸ்லிம் மக்களால் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு கோரி நேற்று முசலி பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-285)


## Invitation for Bids (IFB)
## KARACHCHI PRADESHIYA SABHA, KILLINOCHCHI DISTRICT

1. The Chairman Divisional Procurement Committee (DivPC), on be half of Karachchi Pradeshiya Sabha, now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Bid | Estimated Civil Cost (Without Vat) (Rs.Mn) | ICTAD Grade Required | Bid Validity Days | Required Bid Security: Bond Amount (Rs.) | Required Bid Security: Validity Period | Contract period Days |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/COU/001/2023 | Renovation Of Skanthapuram Library Karachchi Pradeshiya sabha Kilinochchi | 6.74 | C8,C7 and C6 (Building) | 77 | 68,000 | 10.03.2024 | 90 |
| 02 | NP/KN/KPS/COU/002/2023 | Improvement of Kulakarai Road, from Iyanar Road to Behaind Road of Courts at KPS | 2.5 | C9,C8 and C7 (Highways) | 63 | 25,000 | 25.02.2024 | 84 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure. And Public Finance Circulars No 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

4. Qualification requirements are indicated in Section 5 ( Schedule) of the Bidding document.

5. Interested bidders may obtain further information from Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Killinochchi, (T.P No: 0212285761,Fax No: 0212285690) and inspect the bidding documents at the address given below from 13th November 2023 until 24th November 2023 during 9:00Hrs to 15:00Hrs on normal working days.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Procurement Committe, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kiliinochchi from 13th November 2023 until from 24th November 2023 during 9:00Hrs to 15:00Hrs on normal working days upon payment of a non refundable fee of Two Thousand Rupees(Rs.2,000.00). The method of payment will be by cash.

7. Bids shall be delivered in duplicate to the address below at Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Killinochchi on or before 14.00Hrs on 27th November 2023 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend.

8. A pre-bid meeting will be held at 11.00 Hrs on 21st November 2023 at Karachchi Pradeshiya Sabha, A9 Road, Killinochchi.

**Chairman,**
**Procurement Committee,**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Kilinochchi.**

(c-7595) **11.11.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 தமிழ் அரசியல்...

ணித்த வாகனத் தொடரணி மீது இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரையும் நீண்ட விசாரணைக்குப் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஹேன் வீரமன் நேற்று விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுகள் நிரூபிக் கப்படாத காரணத்தாலே அவர்கள் விடுவிக்கப்படுவதாக நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

யோகராஜா நிரோஜன், கரன் எனப் படும் சுப்பிரமணியம் சுரேந்திரராஜா மற்றும் கனகரத்தினம் ஆகிய மூவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ள னர்.

இந்த மூன்று பிரதிவாதிகளும் ஏறக் குறைய 16 வருடங்களாக விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு - கொள்ளுப்பிட்டி பகுதி யில் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி வாகனத் தொடரணி மீது குண்டுவீசி தாக்குதல் நடத்தி அப் போதைய பாகிஸ்தான் உயர்ஸ்தானி கர் பசீர் அலி முகமதுவை படுகொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப் பட்டே குறித்த மூவரும் கைது செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழ்ப் பாட...

பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விடுமுறைக் குப் பதிலாக நவம்பர் 18ஆம் திகதி (சனிக்கிழமை) பாடசாலைகள் நடை பெறும்.

இந்த சிறப்பு ஏற்பாடு குறித்து பாட சாலை அதிபர்களுக்கும் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## உங்கள் வலம்புரி...

கலட்டிச் சந்திக்கும் இடையில்) எனும் முகவரியில் நேற்று 10ஆம் திகதி தொடக்கம் இயங்குகிறது என்பதை உங்கள் அனைவருக்கும் அன்புரிமை யோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

வழமைபோல் என்றும் உங்கள் வாழ்த்தையும் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

வலம்புரி
நிர்வாகம்

## இது மொட்டுக்...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல்நிலைவரம் தொடர் பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்,

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

“பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவற்றை தீர விசாரிக்க வேண்டும், அதன்பின் னரே ஒரு முடிவுக்கு வர முடியும்.

நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழும் நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், அதைவிடுத்து அவர்களின் வயிற்றில் அடிக்கக்கூடாது.

கடந்த வருட ஆரம்பத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி களால் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டார் கள் என்பது உண்மை.

அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிரணியினர் அன்று குளிர்காய முற் பட்டனர். ஆனால், அவர்களால் எது வும் செய்ய முடியாமல் போய்விட்டது” என அவர் தெரிவித்தார். (ம-7)

## ரூ.20 ஆயிர...

20 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வேண்டு மென தேசிய தொழிலாளர் சபை பிரதி நிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அவ்வாறு கொடுப்பனவு வழங்கப் படாவிட்டால் அரசாங்கத்திற்கு அழுத் தம் கொடுக்க நேரிடும் என ஊழியர் களுக்கிடையிலான தொழிற்சங்கத் தின் தலைவர் வசந்த சமரசிங்க குறிப் பிட்டுள்ளார்.

மேலும், இந்த கோரிக்கையை ஏற்க மறக்காதீர்கள். இல்லை என்றால் 13ம் திகதி பாராளுமன்றத்தின் முன் வரு வோம். நாட்டில் உள்ள மற்ற தொழிற் சங்கங்களுடன் இணைந்து செயற்படு வோம்” என்றும் எச்சரிக்கை விடுத் துள்ளனர். (ம-7)

## இலங்கைக்கு...

உலக வங்கியின் நிறைவேற்று சபை இதற்கான அனுமதியை வழங்கி யுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பிற்போட முடியாது - மகிந்த தேசப்பிரிய

“அடுத்த வருடத்திற்கான ஜனாதி பதித் தேர்தலை தொடர்ந்து பிற்போட முடி யாது” என எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், “உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதில் எல்லை நிர் ணய ஆணைக்குழுவின் அறிக்கை எவ் வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அதிகாரவர்க்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மாகாணசபைகளை தொடர்ந்து நடத்து வது நாட்டின் ஜனநாயகத்திற்கு மரண அடியாகும்.

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதைத் தவிர வேறு எந்த வகையிலும் அடுத்த வருடம் நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலை பிற்போடு வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பிற்போட முடியாது. 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.” என தெரிவித்தார். (ம-7)

## இலங்கை...

சர்வதேச கிரிக்கெட் பேரவை நேற்று கூடிய நிலையில், இலங்கை கிரிக்கெட் ஒரு உறுப்பினர் என்ற வகையில் அதன் கடமைகளை கடுமையாக மீறுவ தாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையில் கிரிக் கெட் விவகாரங்களை தன்னாட்சி முறையில் நிர் வகிக்க வேண் டும் மற்றும் நிர் வாகம், ஒழுங்கு முறை மற்றும் நிர்வாகத்தில் அர சாங்கத்தின் தலை யீடு இல்லை என் பதை உறுதிப் படுத்த வேண்டும் என்று இந்த கூட் டத்தில் அறிவிக் கப்பட்டுள்ளது.

இடைநீக்கத் தின் நிபந்தனை கள் சர்வதேச கிரிக்கெட் பேரவையால் சரி யான நேரத்தில் முடிவு செய்யப் படும் என அறி விக்கப்பட்டுள் ளது.

அண்மைக்கால மாக கிரிக்கெட் நிறுவனத்திற்குள் பல்வேறு மோசடி கள் இடம்பெறுவ தாக விளையாட் டுத்துறை அமைச் சர் ரொஷான் ரணசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

சமகால நிர் வாக சபையை முழுமையாக கலைத்து புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண் டும் என பாராளு மன்றத்தில் விவா தம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (ம-7)

## க.பொ.த...

ஜயந்த தெரிவித் துள்ளார்.

அதேவேளை உயர்தரப் பரீ ட்சை திட்டமிட்ட தினத்தில் நடை பெறும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3536
சீட்டிழுப்பு திகதி 10.11.2023
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 12 26 41 75
F
58845
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1324
W 21 70 72 77 W
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance 03788

லக்கி 7 (Lucky 7)
திகதி 10.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0120
L7 இலக்கம் 3 9
வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள்
தனுசு 3 1 0 0 8 4

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.10
சீட்டிழுப்பு இலக்கம் 0603
வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 01 18 20 53 ரிஷபம்
08834
தேசிய லொத்தர் சபை
11

மெகா பவர்
திகதி 10/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1642
R 21 04 06 12 50
50308
www.nlb.lk

மஹஜன சம்பத
திகதி 2023/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 5294
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
G 4 5 6 0 2 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2268
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.10
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 39 60 63 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,519,156/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 10.11.2023 வெற்றி வாரம் 002
சுப்பர் தன சம்பத
K 2 0 3 7 1 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,755,046.40
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திகதி 2023.11.10 வெற்றி வாரம் 4429 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 04 41 44 73 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,439,564.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 400
சீட்டிழுப்பு திகதி 2023.11.10
பச்சை
வெற்றி இலக்கங்கள் 08 27 35
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,651,120/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3980 வர்ணம் கரும் நீலம்.
சீட்டிழுப்பு திகதி 2023.11.10 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 48 52 60 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,750,476/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 37 08 11 45 71
சுப்பர் இலக்கம்
1444
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 463,404,544.20
2023.11.10 வெள்ளி
DLB தொலை பேசி 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2094
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.11.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,183,624/-
அத கோடிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 05 30 60 68 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P:077 544 8503

## VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.


(C-7603)
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7603)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

12 வருட வெற்றிப்பயணமாக...
## கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம், யாழ்ப்பாணம். (17805)
0212 050 988, 0217200989
கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி



நரம்பியல் புனர்வாழ்வு மையம்
மானிப்பாய்
### வேலை வாய்ப்பு
- ★ தாதியர் (Nurse)
- ★ தாதிய உதவியாளர் (Nurse Assistant)
- ★ முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)
- ★ சுத்திகரிப்புத் தொழிலாளி (Labour)

முன் அனுபவம் விரும்பத்தக்கது
சம்பளம் நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்
(C-7599)
Green Memorial Hospital, Manipay ☎ 0212256990 0770163515

## காணி விற்பனைக்கு
❖தாவடியில் விஜிதா மில் அருகில், 4 பரப்பு காணி விற்பனைக்கு பிரித்து தரப்படும்(நல்ல அயல் சூழல்)
❖A9 வீதி முகப்புடன், கைதடி சந்திக்கு அருகில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு.
உரிமையாளர் :
076 662 2216
077 082 1010
(17828)


## அதிகாரி கைது

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ் பத்திரகே உள்ளிட்ட இருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகர் ஒருவரிடம் இருந்து ஒரு கோடி ரூபா இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


## மணமகன் தேவை
யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் 1997 அவிட்டம் 4 ஆம் பாதம் 4 இல் செவ்வாய் அரச தொழில் செய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு :
077 367 1062
(17816)



## விவசாயிகளுக்கு
இந்தியாவில் இருந்து எம்மால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உழவு இயந்திரத்தில் (Tractor) பொருத்தக்கூடியவாறான சகல விதமான விவசாய கலப்பைகளும் எம்மிடம் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S, வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள், A9 வீதி. 070 191 3571
Hot Line : 071 535 7799/ 071 973 9917
(17829)

## Pearson International College
Applications are called for English teachers & IELTS tutors
- ■Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- ■previous IELTS score above or equal to 6.5 is recommended (not necessary)
- ■Prior teaching experience would be an added advantage
- ■Weekends and weekdays shifts are available.

(C-7598)
Email your CV within three days of thisadvertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk
Call +94 74 188 7878 for more info
No.21,3rd Lane, Power house Road, Jaffna.

## மாணவர் அனுமதி
### (தரம் - 01 தொடக்கம் தரம் 11)
எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையான அனைத்து பாடங்களும் பாடசாலை பிரபல ஆசிரியர் குழாமினால் நடைபெறுகின்றது.
புதிய மாணவர்களுக்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றது. உடன் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**இடம் : எழுதுமட்டுவாழ் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன் வீதியில் அந்தோனியார் ஆலய அருகாமை.**
தொடர்பு எண் :076 947 1479
தகவல் :
கல்வி நிலைய நிர்வாகி
(C-7600)



3 ஆம் ஆண்டு
## நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில் 18-05-1999
ஆண்டவன் அடியில் 11-11-2020

அமரர்
## லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)
(உயர்தர மாணவன் - வயாவிளான் மத்திய கல்லூரி - 2018)

குடும்பத்தின் மூத்த மகனாய் அப்பாவின் தலைமகனாய் வந்துதித்த தம்பி கபிலனே. 21 வயது வரை உன்னுடைய தம்பி தங்கைமாருடன் ஒன்றாய் கூடி வாழ்ந்தீரே! இதைப் பொறுக்க முடியாத கொடிய ஆண்டவன் கொடிய நோயினைக் கொடுத்து எங்களிடமிருந்து பிரித்துச் சென்றானே. நாம் இங்கு கதிகலங்கி நிற்கின்றோம். வந்துவிடு தம்பி கபிலனே! மூன்று ஆண்டுகள் உருண்டு ஓடின. தம்பி கபிலனோ வரவில்லை. தம்பி நட்ட மாமரமும் பூக்கவில்லையே தம்பி வரட்டும் என்று சொல்லிக் காத்திருக்கின்றது. இறைவனை மடிப் பிச்சையாய் கேட்கிறேன். என்பிள்ளையை திருப்பித் தந்திடு. சிவன் கோயிலில் சிவனாய் வீற்றிருக்கிறாய். கூட்டிவர நினைக்கின்றோம். கனவாகி போகிறதே! நிஜமாக வந்துவிடு தம்பி கபிலனே. எங்கள் வாழ்வு ஒளிரட்டும். தம்பி கபிலன் நினைவோடு என்றும் நாங்கள் காத்திருக்கின்றோம்.

**இருள் சூழ்ந்த அப்பாவின் வாழ்வில் ஒளி வீசுமோ**
**இருள் கொண்ட மேகங்கள் கலைந்தோடுமோ**
**துயர் கொண்ட என் வாழ்வில் விடிவெள்ளி இனிப் பூக்குமோ**

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.
(C-7587)



## Happy Supermarket - உரும்பிராய்
உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 275/= | (max 1 Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 440/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 295/= | (max 2 Kg) |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg அரிசி மா | - 189/= | |
| 1 Kg கோதுமை மா | - 181/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 188/= | |
| 400g அங்கர் பால்மா | - 1025/= | (1080/=) |
| 70g பேபி சோப் | - 108/= | (145/=) |
| 400g நெஸ்டமோல்ட் | - 800/= | (830/=) |
| 01 சந்தூர் சோப் | - 140/= | (175/=) |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | (430/=) |
| 01 லக்ஸ் சோப்-றோஸ் | - 145/= | (175/=) |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= | (330/=) |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | (80/=) |
| 400g சஸ்ரயன் (Sustagen) | - 3400 /= | (3900/=) |

1025/=


1080/=
(17839)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org